செ.வெ.எண்: நாள்: 21.09.16

**விருதுநகர்**
**கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தில்**
**தீபாவளி பண்டிகையை முன்னிட்டு 30% சிறப்பு தள்ளுபடி விற்பனையை**
**மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.அ.சிவஞானம்,இ.ஆ.ப., அவர்கள்**
**துவக்கி வைத்தார்**

----

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு விருதுநகர் கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தில் 30 சதவீத சிறப்பு தள்ளுபடி முதல் விற்பனையினை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. அ.சிவஞானம்,இ.ஆ.ப., அவர்கள் குத்துவிளக்கேற்றி இன்று (21.09.16) துவக்கி வைத்து தெரிவித்ததாவது :-

கோ-ஆப்டெக்ஸ் என அனைவராலும் அழைக்கப்படும் தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம், 1935-ம் ஆண்டு துவக்கப்பட்டு தொடர்ந்து 80 ஆண்டுகளாக தமிழ்நாட்டில் உள்ள நெசாளர்கள் வாழ்வாதாரம் சிறக்க அவர்களுக்கு தொடர்ந்து வேலை வாய்ப்பளிக்க அவர்கள் உற்பத்தி செய்யும் துணிகளை விற்பனை செய்து கோ-ஆப்டெக்ஸ் சிறப்பான முறையில் சேவையாற்றி வருகிறது. இந்தியாவிலுள்ள கைத்தறி நிறுவனங்களிலேயே முதன்மை நிறுவனமான கோ-ஆப்டெக்ஸ் திகழ்வதற்கு நெசவாளர்களின் ஒத்துழைப்பும், வாடிக்கையாளர்களின் பேராதரவும் முக்கிய காரணம் ஆகும்.

தமிழ்நாட்டில் நெசவு தொழில் கூட்டுறவு சங்கங்களாக உள்ளது. அதில் நெசவாளர்கள் கடின உடல் உழைப்பால் அழகிய கை வண்ணத்தில் தரமான மற்றும் புதிய வடிவமைப்புகளில் துணிகள் உருவாக்கி கோ-ஆப்டெக்ஸ்க்கு வழங்கி வருகிறார்கள். பாரம்பரியமிக்க இந்நெசவு தொழில் நலிவடையாமல் இருக்க தமிழ்நாடு அரசு பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தி நெசவாளர்கள் வாழ்க்கை தரத்தை மேம்பட உதவி புரிந்து வருகிறது. கைத்தறி ரகங்களின் விற்பனையை அதிகரிக்க தமிழக அரசு எதிர்வரும் தீபாவளிபண்டிகையை முன்னிட்டு பட்டு, பருத்தி கைத்தறி ரகங்களுக்கு 30 சதவீதம் சிறப்பு தள்ளுபடி வழங்கி வருகிறது.

நமது விருதுநகர் கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தில் தீபாவளித் திருநாள் பண்டிகையை முன்னிட்டு வாடிக்கையாளர்களின் மனதைக் கவரும் வகையில் பல வித வடிவமைப்புகளில் பருத்தி, பட்டு சேலைகள், வெண்பட்டு சேலைகள், தற்போது உடல்நலத்திற்கும் சுற்றுச்சூழலுக்கும் ஏற்ப ரசாயன உரங்கள் இல்லாமல் இயற்கை முறையில் தயாரிக்கப்பட்ட ஆர்கானிக் புடவைகள், கண்டாங்கி சேலைகள், செட்டிநாடு சேலைகள், கைத்தறி சுங்கடிச் சேலைகள், படுக்கை விரிப்புகள், தலையணை உறைகள், நவீன காலத்திற்கு உகந்த ஜீன்ஸ், டாப்ஸ், குர்தா வேட்டி, சுடிதார் மற்றும் நவீன யுக ஆடவர்களை கவரும் விதமாக லினன் / காட்டன் சட்டைகள் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளது.

தங்கமழை பரிசுத்திட்டத்தின் மூலம் ரூ.2000-க்கு ரொக்க விற்பனை வாங்கும் வாடிக்கையாளர்களுக்கு பரிசு கூப்பன் வழங்கப்பட்டு அந்த கூப்பனில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு, மிக சிறந்த முறையில் பதிலளிக்கும் வாடிக்கையாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு ஒவ்வொரு மண்டலத்திலும் முதல் பரிசாக 8 கிராம் தங்க காசு 5 நபர்களுக்கும், இரண்டாம் பரிசாக 4 கிராம் தங்க காசு 15 நபர்களுக்கும் பரிசாக வழங்கப்படவுள்ளது. இத்திட்டம் வாடிக்கையாளர் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. மேலும் அரசு மற்றும் பொதுத்துறை நிறுவன ஊழியர்களுக்கு கடன் விற்பனை வசதி உண்டு. தீபாவளி பண்டிகை வரை அனைத்து விடுமுறை நாட்களிலும் விற்பனை உண்டு. மேலும் மின் வணிக வலைத்தளமான www.cooptex.com என்ற இணையதளத்திலும் கோ-ஆப்டெக்ஸ் சரக்குகளை பெற்று கொள்ளலாம்.

மதுரை மண்டலத்தின் கட்டுப்பாட்டில் இயங்கி வரும் 20 விற்பனை நிலையங்களின் மூலம் 2015-2016ம் ஆண்டு ரூ.2363.27 இலட்சம் விற்பனை செய்யப்பட்டுள்ளது. 2016-2017ஆம் ஆண்டிற்கு விற்பனை குறியீடாக ரூ.30 கோடி இலக்க நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. விருதுநகர் மாவட்டத்தில் அருப்புக்கோட்டை, இராஜபாளையம், சிவகாசி, திருவில்லிபுத்தூர், விருதுநகர் ஆகிய 5 விற்பனை நிலையங்களில் கடந்த 2015-2016ம் ஆண்டு தீபாவளி விற்பனையாக ரூ.244.62 இலட்சம் விற்பனை செய்யப்பட்டுள்ளது. 2016-2017ம் ஆண்டிற்கு தீபாவளி விற்பனை குறியீடாக ரூ.280.00 இலட்சம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. கடந்த 2015-2016ம் ஆண்டு விருதுநகர் கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தில் மட்டும் தீபாவளி விற்பனை ரூ.88.55 லட்சங்கள் மதிப்பிலான ஆடைகள் விற்பனை செய்யப்பட்டுள்ளது. விருதுநகர் கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தின் 2016-2017 ஆண்டு விற்பனை குறியீடாக ரூ.115.00 இலட்சங்கள் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. கோ-ஆப்டெக்ஸில் வாங்கும் ஒவ்வொரு ஜவுளி ரகமும் கிராமப்புறங்களில் உள்ள ஏழை கைத்தறி நெசவாளர்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்திடும். எனவே பொதுமக்கள் இந்த அரிய வாய்ப்பினை பயன்படுத்தி கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தில் ஆடைகள் வாங்கி அணிந்து மகிழ்ந்திட வேண்டுமென மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.அ.சிவஞானம்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் விருதுநகர் வட்டாட்சியர் திரு.சங்கரபாண்டியன், கோ.ஆப்டெக்ஸ் நிர்வாக குழு உறுப்பினர் திருமதி.ஆர்.மஞ்சுளா, மதுரை மண்டல மேலாளர் திருமதி.ர.ரஞ்சினி, முதுநிலை மேலாளர் திரு.கோ.அன்பாழகன், மேலாளர்(அரசுதிட்டம்) திரு.நாகராஜன், துணை மண்டல மேலாளர் (நிர்வாகம்) திரு.ஸ்டாலின், துணை மண்டல மேலாளர் (துணிக்கை) திரு.கே.மணிவண்ணன், உதவி விற்பனையாளர்(பொறுப்பு) திருமதி.சந்தனமாரி உட்பட விருதுநகர் கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலைய ஊழியர்கள், முக்கிய பிரமுகர்கள், வாடிக்கையாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு - செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், விருதுநகர்.**